# இசையமுது

## இரண்டாம் பகுதி

### காதல்

### இங்கே உண்டு

எடுப்பு

போய்க் கொண்டிருந்தார்கள்—மேலும்
போய்க் கொண்டிருந்தார்கள்!

உடனெடுப்பு

மாய்க்கு கொடுங்கதிர் மேற்குப் புறத்தினில்
போய்க் கொண்டிருக்கையில் பொன்னனும்
பொன்னியும் போய்க் கொண்டிருந்தார்கள்.

அடி

"காய்க்கும் பலாவிலும் கள்ளி மிலாரிலும்
பொன்னொளி காணும்" என்றாள்—அவன்,
"சாய்க்கும் ஒளிப்புனல் யார்க்கும் சராசரி
தானடி" என்றுரைத்தான்! பின்னும்
போய்க் கொண்டிருந்தார்கள்.

"சோட்டுப் புறாக்களில் ஆணிடம் பெட்டையின்
தொல்லையைப் பாரும்" என்றாள்—அவன்,
"கேட்டதைப் பெற்றபின் இன்னுமத் தொல்லையைக்
கெஞ்சிற்று வஞ்சி" என்றான்! பின்னும்
போய்க் கொண்டிருந்தார்கள்.

"நல்லிதழ்த் தாமரைத் தேனுக்கு, வண்டுகள்
நாடுதல் பாரும்" என்றாள்—அவன்,
"செல்வரின் வீடு திறந்ததடீ பசி
தீரும் வரைக்கும்" என்றான்! பின்னும்
போய்க் கொண்டிருந்தார்கள்.

"செவ்வலரிக் கொரு தீமையுண்டா? கண்
சிவந்தது பாரும்" என்றாள்—அவன்,
"அவ்விடம் முல்லை சிரிப்பதும், தன் நொச்சி
ஆடலும் நோக்கி" என்றான்! பின்னும்
போய்க் கொண்டிருந்தார்கள்.

"வாழுதல் எண்ணிஇவ் வையம் வெறுத்தவர்
வந்தனர் பாரும்" என்றாள்—அவன்,
கீழுலகத் துள இன்ப மெலாம் இவர்
கேட்டதும் இல்லை என்றான்! பின்னும்
போய்க் கொண்டிருந்தார்கள்.

## ஆடவந்தாள்

அவன் :

ஆடற் கலைக்கழகு தேடப் பிறந்தவள்
ஆடாத பொற்பாவை ஆடவந்தாள்;
என்னோ டாட வந்தாள்;
மகிழ்ந் தாட வந்தாள்! (ஆ)

வாடாத தாமரைக்கை வானில் ஒளி தெறிக்க
மங்காத செங்காந்தள் விரல்கள் பொருள் குறிக்க (ஆ)

ஒடுபிளந்தசெம் மாதுளைபோல் உதட்டில்
உள்ளம் விளைத்தநகை மின்னவும்—கா
தோரத்து வண்டுவிழி ஓடைமலர் முகத்தில்
ஓடிஎன் உளங்கவர்ந்து தின்னவும்
காடு சிலிர்க்கும்படி மேலாடு முன்தானை
காற்றோடு காற்றாகப் பின்னவும்
காதற் கரும்பொன்று காலிற் சிலம்பணிந்து
கடிதில் இடைதுவள ஆடியதோ என்னவும் (ஆ)

அவள் :

பொன்மேனி காட்டிஎனை இன்பத்தில் ஆழ்த்தினான்
பூரிப்பிலே எனையும் ஆடவைத்தான்
தன்னோடாட பாட வைத்தான்
மகிழ்ந் தாட வைத்தான் (பொ)

தென்றல்வரும் சந்தனப் பொதிகைமேல் அருவிபோல்
தேனான செந்தமிழ்ச் சிந்தொன்று பாடினான். (பொ)

புன்னைமலர்க் காம்பு போன்றதோர் சிற்றடிப்,பு
றாவும் மயிலும் களிஊன்றவே—அவை
பூணும் அசைவுகளிற் காணும் அழகினின்று
புதிய எண்ணம் ஒன்று தோன்றவே
அன்ன ஆடற்கலை உலகுக்களித்த தமிழ்
அரசர்பெருங் குடியைச் சேர்ந்தவன்
ஆடினேன் அவனோடாடினேன் உற
வாடினேன் மகிழ்ந்து கூடினேன். (பொ)

## திருமண வாழ்த்து

ஒருமன தாயினர் தோழி—இந்தத்
திருமண மக்கள் என்றும் வாழி!
பெருமன தாகி இல்லறம் காக்கவும்
பேறெனப் படும்பதி னாறையும் சேர்க்கவும்
ஒருமன தாயினர் தோழி!

மருமலர்த் தார்புனை மார்பனோடும்
மழைபோற் கூந்தல் அழகன்னப் பேடும்
வருவார்என அந்தப் பஞ்சணை தேடும்!
வந்து வரைவார் இன்ப இலக்கிய ஏடும்!
ஒருமன தாயினர் தோழி!

இந்தநாள் போலே எந்தநூற் றாண்டும்
இன்பம் எனவே ஒவ்வோர் இமைப்போதும் தாண்டும்!
செந்தமிழ் நாட்டிடைத் தொண்டுகள் யாண்டும்
செயத்தக்க மக்களை இவர்பெற வேண்டும்
ஒருமன தாயினர் தோழி!

## சோலைக் காட்சி

**தலைவன்**

தழுவின மலர்களை வண்டு பாராய்
தழுவின பறவைஇ ரண்டு மாதே.

**தலைவி**

அழகிய கொடிகள்து வண்டு மேலே
அணைவன கிளைகளை வந்து நேராய்

**தலைவன்**

மணமொடு பழகிய தென்றல் பாராய்
மகிழ்வன நமதிரு நெஞ்சம் மாதே

**தலைவி**

அணைவன குளிரினை அந்தி மாலை
அதிவிரை வினிலும "தன்பு தேவை"

**தலைவன்**

"கதிரவன் ஒளியொடு கொஞ்சும் வானே"
கடைவிழி திறஇள வஞ்சி மானே

**தலைவி**

புதியதோர் சுவையினை இன்று நாமே
"பொழுதொடு நுகர்வது நன்று நாதா"

## தலைவியின் நினைவு

அன்றலர்ந்த செந்தாமரை—இவ்
வகிலமே புகழ்ந்திடும் அன்னவன் முகம் (அன்)

நின்றிருந்தேன் பின்புறமாய்
வந்து சடையை இழுத்தான்—என்
கன்னத்தையும் கிள்ளியே தன்
கைக்கு முத்தம் கொடுத்தான் (அன்)

(என்) மனம் எனப்படும் மணிமேடையில்
குடியேறிய மன்னன்—என்
வாழ்வெனப்படும் புறம் போக்கை
வளமே புரிவானோ!
கனி எனப்படும் என் தேனிதழ்
இனிதே சுவைப்பானோ!
அவன்—கலகல வெனத் தமிழ் பேசிட
வருவானோ அன்னவன் முகம் (அன்)

கோடையிற் புனல் ஓடையைப் போல்
குளிரக் குளிரத் தழுவி—இக்
கோதை படும் வாதை எலாம்
குணமே புரி வானோ

வீடு தோறும் மாத ரெலாம்
விளக் கேற்றிடும் மாலை
வித வித விதக் கலவி செய்ய
வாரானோ அன்னவன் முகம் (அன்)

## வண்டும் மலரும்

**அவள்**

செழுமலர் இதழ் கடை திறந்தது
தேன்விலை கொள்ள ஏன் வரவில்லை
வண்டே வண்டே

**அவன்**

எழும் பலபல எண்ணம் என்னும்
சூறைக் காற்று மோது கின்றதே
பூவே பூவே

அவள்

கடலில் கலக்கும் காட்டு வெள்ளத்தை
காற்று மறிக்கும் ஆற்றல் உண்டே
வண்டே வண்டே

அவன்

விடு நினைவை விளை பயனில்லை
வீணா சைகள் ஏனோ இனி
பூவே பூவே

அவள்

இளமை குறைந்து போனதோ எதிர்
கால நம்பிக்கை ஏனிழந்தாய்
வண்டே வண்டே

அவன்

களர் நிலத்தினில் விளைச்சலை எதிர்
காலம் கொடுக்க ஏலுமோ என்
பூவே பூவே

**குறிப்பு :** இது தலைவியை மலடி என்று தலைவன் வெறுத்துக் கூறியதும், அவள் அமைவு கூறிக் கொஞ்சுவதும் ஆகும்.

## ஏந்திழை

எடுப்பு

இன்பம் இன்பம் அடடா-அவ்
வேந்திழையைக் காணுந்தோறும்

உடனெடுப்பு

அன்னம் நடக்கும் நடையும்—அருகே
அன்னாள் அழகிய நடையும் (இ)

அடி

வஞ்சிக் கொடியும் அசையும்—அருகே
மங்கை சிற்றிடை அசையும்
நெஞ்சந் தன்னில் அதுதான்—காதல்
நெருப்பை இட்டுப் பிசையும் (இ)

கோவைக் கனியும் சிவக்கும்—அருகே
கோதை இதழும் சிவக்கும்
யாவும் அவளுக் கீவேன்—என நான்
எண்ணிடும் எண்ணம் உவக்கும் (இ)

பச்சைக் கிளியும் கொஞ்சும்—அருகே
பாவையின் உதடும் கொஞ்சும்
மெச்சும் போதே அடடா—மங்கை
மீதினில் மையல் மிஞ்சும் (இ)

விண்ணில் நிலவும் ஒளிரும்
மெல்லியின் முகமும் ஒளிரும்
கண்ணில், கருத்தில் அதுதான்—காதற்
கவிதை காட்டி மிளிரும். (இ)

கருத்துரைப்பாட்டு.

## தலைவி கூற்று

### பிரிவிடைமெலிந்த கிழத்தி சொல்லியது

செல்லார் என்றுநான் நினைத்திருந்தேன்—செல்லென்று
சொல்லாள் என்று தாம் நினைத் தகன்றார் (செ)

அல்லல் உடையதென் உள்ளம்
அதுவன்றி மயக்கம் கொள்ளும்
போல்லாத எங்கள் ஊக்கம் விளைத்தபோர்
நல்ல பாம்பு கௌவிய தாயிற்றே (செ)

(குறுந்தொகை 43, ஔவையார் பாட்டின் கருத்து)

கருத்துரைப்பாட்டு.

## தோழி கூற்று

### கடிது வருவார் என்று ஆற்றுவித்தது

அம்மா உன்மேல்—அவர்
அதி விருப்பம் உடையவர் (அம்)

செம்மையாய் விரைவில்
திரும்பினும் திரும்புவார்
திரும்பி வந்தின்பம்
நல்கினும் நல்குவர் (அம்)

அகன்றவர் சென்ற வழியில்
ஆண்யானை, பெண்யானையின் பசியை
நின்ற யா'மரம் உரித்தூட்டல் காண்பார்
நின்நிலை எண்ணி இன்றே திரும்புவார் (அம்)

(குறுந்-37 பாலைபாடிய பெருங் கடுங்கோ பாடற் கருத்து)

கருத்துரைப்பாட்டு.

## தலைவி கூற்று

**பொருள்வயின் பிரிந்த இடத்துத் தலைவி ஆற்றாமை கண்டு தோழி சொன்னது**

நினையாரோ தோழி?
தினையேனும் எனை
நினையாரோ தோழி?
நினைவா ராயின் எனை யாள வருவார்!
நினைக்கிலார்! இனியேனும்என் நெஞ்சம் களிக்க
நினையாரோ தோழி!
திவேடன் அன்பின் இரும்புமுனை தீட்டும் ஒலிபோல்
செங்காற் பல்லி துணையினை அழைப்பது கேட்டும்
ஆய அக் கள்ளிக்காட்டு வழிச்செல்பவர் மீட்டும்
அணுகாரோ அணுகாவிடில் அதுவென் நெஞ்சை வாட்டும்
நினையாரோ தோழி!

(குறுந்-16. பாலை பாடிய பெருங் கடுங்கோ பாடற் கருத்து)

கருத்துரைப்பாட்டு.

## தலைவன் கூற்று

**இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தபின் பிரிவர் என்று கருதி அஞ்சிய தலைமகட்குத் தலைவன் கூறியது**

என் தாய் யாரோ!
உன் தாய் யாரோ—பெண்ணே
என் தந்தை உன் தந்தை உறவினர் அல்லரே

இன்றிங் கேஉனை எவ்வா றடைந்தேன்?
நீஎன்னை எவ்வா றறிந்தாய்?—நாம்
செம்மண் நிலமும் பெய்த மழையும்போல்
சேர்ந்தோம் அடடா இன்பம் ஆர்ந்தோம் (என)

இரண்டு நெஞ்சில் வீறிட்ட காதலே
இருவரை யும்சேர்த்த திவ்வையமீதே
மருண்ட மக்கள் மாப்பிள்ளை பெண்களை
மணத்தில் கூட்டுவ தாக எண்ணுவார் (என)

(குறுந்தொகை 40 செம்புலப்பெயனீரார் பாடற் கருத்து)

# தமிழ்

## நாடாண்டாயே

நாடாண் டாயேத் மிழேநீ
ஞாலம் ஆண்டாய் வாழ்வும் ஈந்தாயே!

ஏடுயாவும் நீயே, மக்கள் எண்ணம்
எவைகளும் நீயே பகை தீர்ந்தே (நா)

நாடு மீளவே கேடு தீரவே
நாமினி இலங்கி நனி வாழவே (நா)

இனிதாகிய தமிழே எனதுயிரே
இளைஞர்க்கிடை மூளுகின்ற உணர்வே!

கனியினும் மிகுசுவையே உனைநான்
காணாப்போது கவலை மிகுந்திடுதே

கனல்நிகர் ஆரியர் நலிவேசெயினும்
கலையாவும் வெந்துபோகச் செயினும்

புனலிடைத் தமிழ்நூற்களெலாம் போயினும்
புதுமை இளமை எனும்படி (நா)

## எது இசை?

தமிழ் பாடல் முறையா, நாட்டிலே
கண்,

வாயைக் காட்டல் முறையா?
எது முறை சொல்க மனமே!

தமிழ் பேசுவார்க்குத் தீந்தமிழினிதோ
தாங்களறியாத பிறமொழி பாடுதல் இனிதோ

மொழி பொருள் மிகநன் றாகக் காட்டுதல் கவியா?—தம்
விழிபல் உதடுகாண அதட்டல் கவியா?

பிழைபட நிந்தனைபட நடப்பது நலமா?
பெருமை ஓங்குமாறு தமிழைப் போற்றுதல் நலமா? (த)

## தமிழ்த் தொண்டு

தமிழ்என்னும் மணிவிளக் கேற்றடா நாட்டில்
தமிழரின் நெஞ்சமாம் அழகான வீட்டில்!
அமுதென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியை
அறமென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியை (த)

தமிழ்என்ற உணவினைக் குவியடா யார்க்கும்
தமிழருக் கிங்குள்ள குறையெலாம் தீர்க்கும்
சமமாக ஆற்றடா தமிழூழியத்தைச்
சகலர்க்கும் ஆற்றடா தமிழூழியத்தை. (த)

தமிழென்ற வன்மையைக் கூட்டடா தோளில்
தமிழர்க்கு நலமெலாம்வரும் ஒரே நாளில்
அமைவினால் புரியடா செந்தமிழ்த் தொண்டே
அன்பினால் புரியடா செந்தமிழ்த் தொண்டு. (த)

தமிழ்என்னும் உணர்வினைச் சேரடா எங்கும்
தமிழரின் ஆட்சியே உலகெலாம் தங்கும்
இமையேனும் ஓயாது தமிழுக் குழைப்பாய்
இன்பமே அதுவென்று தமிழுக் குழைப்பாய் (த)

## முழங்கும் குறள்

முழங்கிடுகின்றதே அறம் (மு)

முட்டுப்படும்உலகே இனவேற்றுமை
பட்டுக்கெடும் உலகே நம்திருக்குறள் (மு)

'உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துளெல்லாம் உளன்' எனல்கேட்டீரோ

வாய்மை அடிப்படை மக்களைச் சேர்க்கும்
மாண்பிலா ஆட்சி யாளரை நீக்கும்
தாய்மொழி தன்மையும் மீட்டுக் காக்கும்
தள்ளத் தகாத்திரு வள்ளுவர் வாய்மொழி (மு)

'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்' எனல்கேட்டீரோ

ஒற்றுமை ஒன்றினால் அச்சம் பறக்கும்
ஊருக் குழைப்பதோர் வீரம் பிறக்கும்
சற்றும் பிசகாமல் எண்ணிய நலங்கள்
சாரும்என்று திரு வள்ளுவரின் குறள் (மு)

'துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்' எனல்கேட்டீரோ!

நாட்பட்டுப் போனஓர் சட்டத்திலே ஒரு
நல்லது செய்யாத சட்டத்திலே
ஆட்பட்டுப் போகாமல் ஒற்றுமையாயதை
ஆற்றலில் மாற்றுக என்று திருக்குறள் (மு)

'அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில்'' எனல் கேட்டீரோ?

அஞ்சத் தகுந்ததற் கஞ்சுதல் வேண்டும்
அஞ்சத் தகாததற் கஞ்சிட லாமா?
கெஞ்சினால் மிஞ்சுவர் கேடாள வந்தார்
கிளர்ச்சி தேவையென் றுணர்த்திய திருக்குறள். (மு)

### நிலவே

நிலவே நீ முன் நடந்ததை கூறுவாய்! மெய்யாய்க் கூறுவாய்
இலகு செந்தமிழையும் உன்னையும் கூட்டி
இயற்கை அன்னைவளர்த்த நிலையோ பாலூட்டி

சங்கமேறித்தமி ழுலகிருள் போக்கித்
தாவியெழில் வானமிசை நீயுலவத்
தமிழ்வாழ்த்தி உனைவாழ்த்தி மக்கள் வாழ்வு
தொடங்கியதை மறந்தனையோ குளிர்ந்த
வெண்ணிலவே நீ!

வடமொழிக்குதவி தமிழ்மொழி அன்றோ?
மறுமொழி கூறாதிருப்பது நன்றோ?
கடல்சூழ் வையம் ஆண்டது தமிழோ?
கையேந்தி வந்தவர் பேசிய மொழியோ? (நில)

ஆரியர் ஆட்சி வாய்த்த பின்னை
அழகிய தமிழ்நூ லாகிய பொன்னை
வேரொடு மாற்றிட வஞ்சம் என் னென்ன
விளைத்தார் அதைத்தான் கேட்டேன் உன்னை. (நில)

## பெண்கள்

### அன்னையின் ஆவல்

காலுக்குப் புன்னையிலை போலும் செருப்பணிந்து
கையில் விரித்தகுடை தூக்கி—நல்ல
கல்விக் கழகமதை நோக்கிக்—காய்ச்சும்
பாலுக்கு நிகர்மொழிப் பாவைநீ செல்லுவதைப்
பார்க்கும் இன்பந்தானடி பாக்கி

மேலுக்குச் சட்டையிட்டு மெல்லியசிற் றாடைகட்டி
வீட்டினின் றும் ஆட்டமயில் போலே—கைம்
மேற்சுவடி யோடுதெரு மேலே—கூர்
வேலுக்கு நிகர்விழி மெல்லிநீசெல் வதைக்காண
வேண்டுமே இப் பெற்றவள்கண் ணாலே

ஓவியம்கற் றான்உன்மகள் காவியம்கற்
ஊரார் உன் றனைமெச்சும்
உவகைதான் தாங்குமோஎன்
பாஎழு தும்திறத்தால் ஊர் அமைதி
பாரோர் புகழ்வ தெந்நாள்

றானெனவே
போது—கண்ணே
காது—நீஓர்
கொண்டதென்று
ஓது?

மாவடு நிகர்விழிச் சின்னஞ் சிறுமியே நீ
மங்கை எனும்பருவம்
வாழ்வுக்கோர் மாப்பிள்ளையைக்
'தேவை இவன்' எனவே செப்பும்
தேன்! கனி! தித்திக்குங்கற்

கொண்டு—காதல்
கண்டு—காட்டித்
மொழி எனக்குத்
கண்டு.

பூவும் நறுமணமும் ஆவியும் உடலும்போல்
பொன்னேஉன் அன்பனொடு
புன்மையும் இல்லாமல் அறம்
காலில் உலவுவது காணக் கிடைத்திடுமோ
கண்ணே சொல்லடி அன்பு

சேர்ந்து—சிறு
சார்ந்து—பூங்
கூர்ந்து

சேவல்என நிமிர்ந்து சிறுத்தையெனப்
சீறும் குழந்தைகளைப்
செல்வம் பலவும் மிக
காவல் இருந்துவளந் தாவும் திராவிடத்தைக்
காப்பது காண வேண்டும்

பகையைச்
பெற்றே—நீ
உற்றே—நல்ல
சற்றே

## ஆண் குழந்தை தாலாட்டு

ஆராரோ ஆரிரோ ஆராரோ ஆரிரோ
ஆராரோ ஆரிரோ ஆரரோ ஆரிரோ
ஆராரோ ஆரிரோ திராவிடனே எம்கரும்பே
சீராரும் இன்பத் அன்பேநீ கண்வளராய்.
ஆரா அமுதேஎன்

ஆரியர்கள் இங்கே அடிவைக்கு முன்னமே
வேரிட்டு வாழ்ந்த வெற்றித் திராவிடரின்
பேரர்க்குப் பேரனே பிள்ளாய்நீ கண்ணுறங்கு!
சேர அரிதான செல்வமே கண்ணுறங்கு!

வெண்டா மதுரையில் விளையாடும் வண்டுபோல்
கண்தான் பெயரநீ என்ன கருதுகின்றாய்?
பண்டைத் திராவிடத்தின் பண்பு குறைக்க இனி
அண்டைப் பகைவர் நினைப்ப ரெனும் ஐயமோ

தொண்டு விரும்போம் துடை நடுங்கோம் எந்நாளும்
சண்டையிட்டுத் தோற்றதில்லை தக்க திராவிடர்கள்
எண்டிசையும் நன்றறியும் அன்றோ இனிக்குங்கற்
கண்டே கனியே என் கண்மணியே கண்வளராய்

தங்கம் உருக்கித் தகடிட்டுப் பன்மணிகள்
எங்கும் அழுத்தி இயற்றியதோர் தொட்டிலிலே
திங்கள் திகழ்ந்ததெனும் வெண்பட்டு மெத்தையின்மேல்
மங்கா உடல் மலரும் வாய் மலரும் கண் மலரும்

செங்கை மலரும் சிரிப்பின் எழில் மலரும்
தங்கா தசைந்தாடும் தண்டைஇரு கால் மலரும்
அங்கங் கழகுசெய்யும் ஆணழகே கண் வளராய்
எங்கள் மரபின் எழில் விளக்கே கண் வளராய்!

## பூத்தொடுத்தல்

**தலைவி :**

விருந்து வரக் கண்ட
மெல்லிய முகம்போல், முல்லை
யரும்பு மலர்ந்த தென்ன — வேடிக்கை

**தோழி :**

தெரிந்தவரைக் கண்டாலும்
தெரியாதாரைக் கண்டாலும்
சிரிப்பதுதான் இதன் — வாடிக்கை

**தலைவி :**

தங்கத்தில் அச்சிட்டுச்
சரிபார்த்து மெருகிட்டு
மங்கா இயற்கை தந்த — சாமந்தி

**தோழி :**

இங்கே இதுவுந்தான்
மஞ்சளுக் கவளப்பன்
சரக் கொன்றை பாரி — தைமுந்தி

**தலைவி :**

அரளி மாணிக்கம் போன்ற
அலரி மருக் கொழுந்தும்
அடுக்கடுக்காய் வைத்துத் — தொடுப்போம்

**தோழி :**

ஒரு விரற் கடை பச்சை
ஒரு விரற் கடை வெள்ளை
இப்படியே தொடுத்து — முடிப்போம்

## புறாவே

தன்போல் மற்றொன்றைத் தான்உண் டாக்குதல்
மன்னுயிர்க் கெல்லாம் இயல்போ புறாவே?
இன்பம், குழந்தையைப் பெறுவது தானோ?
வளர்ப்பதும் இன்பமோ மாடப் புறாவே?

உயிரில் கலந்த உணவையும் கக்கியே
ஊட்டிடு கின்றதும் இன்பமோ புறாவே?
மயல்தீர் வாழ்வில் இன்பத்தின் அடிப்படை
மக்களைப் பேறுவதோ மாடப் புறாவே?

மக்களின் மலருடல் தொடுவதும் இன்பமோ?
மழலை மொழியும், குழலோ புறாவே?
மக்களில் லாதார் வாழ்க்கை விழலோ
மனநலம் வாய்ந்த மாடப் புறாவே?

## பந்தாடல்

**தலைவி :**

அடித்த பந்தினை மறுத்துப் பிடிக்க
மாதே
ஆகாதடி
ஆகாதடி

**தோழி :**

பிடித்துப் பந்தினை திருப்பினேன் அடி
மாதே
நீ பாரடி
நீ பாரடி

**தலைவி :**

அங்குவந்த பந்துன் திங்கள் முகத்தொடு
மானே
போராடுதே
போராடுதே

**தோழி :**

மங்கை என் பந்துப றந்துன் மார்புக்கு
மானே
நேராகவே
நேராகவே

**தலைவி :**

தாக்கிடும் என்பந்து பார்த்துத் தடுத்துக்கொள்
தோழி
நேராகவே
நேராகவே

தோழி :

தூக்கி அடித்தேனே பூப்பந்து பாரடி
தோள் மீதிலே தோழி
தோள் மீதிலே

## நாடு

### வேங்கைக் குகையில்

நீள் வையம் எதிர்த் திடினும்—அஞ்சுதல் இல்லாத்
தோள் வாய்ந்த மூவேந்தர்—சீர் ஆட்சி.

நாள் என்ற கடல் வெள்ளம் தான் கொண்டு போனதே
கோள் வாய்ந்த பெருந்தீயர் வரவால் இருளானதே!

யாவரும் ஒன்றே என வாழ்ந்தோமே நாங்கள்
இனம் சாதி மதவெறி அலங் கோலம்.

மேவி வீழ்ச்சி நிலை அடையவும் ஆனதே
வேங்கைக் குகைக்குள் நரி வாழ்ந்திடவும் ஆனதே.

### எதற்கும் மேல்

தமிழ் நாடுதான் மேலான நாடு
தமிழர்க் கெல்லாம் மற்றவை காடு (த)

கமழ் தென்றலே நடமாடு நாடு
காவிரி நீள்வைகை பாயும் நாடு (த)

கன்னல் மா பலாவும் வாழை கமுகு
செந்நெல் யாவுமே மலிகின்ற நாடு (த)

பொன்னின் வார்ப்படம் போல் மாதரோடு
போர்புரி மாவீரர் வாழும் நாடு. (த)

### மீட்சி எப்போது?

காலைமுதல் மாலைவரை ஏருழுவர்
பசியால் மெலிந்து நோயினில்வாடி (கா)

தோலைமூட ஆடை ஏதும் இலையே—உடல்
தூய்மைக்கும் யாதொருவழியுமே இலையே (கா)

அண்டி வாழ ஒருவீடில்லை. பிள்ளைகள்
கல்வி அடையவோ வழியில்லை. மீட்சியும்
கண்டதில்லை நாளுமே வீழ்ச்சி எனில்
கோரும் பொதுவாழ்வு தூய்மை பெறுமா? (கா)

## எது தம்பி வேண்டும்

கொல்லையிலே ஒரு சிட்டு—நல்ல
கூட்டினிலே ஒரு கிள்ளை
சொல்லும் இவற்றினில் யாது?—நீ
துன்பம் இல்லாதது கூறு!
முல்லையிலே ஒரு வண்டு—பண
மூட்டையின் மேலொரு செல்வன்
இல்லை என்னாத நல்வாழ்வை—நீ
இந்த இரண்டில் விளக்கு.

கோயிலில் பார்ப்பனர் வேதம்—குப்பை
கூட்டிடுவாள் தமிழ்ப்பேச்சு,
தூயது யாது சொல் தம்பி—அன்றித்
தொல்லை விளைப்பது யாது?
வாயிலிலே கொஞ்சும் ஏழை—சிலை
வார்க்கும் திருப்பணி யாளன்
ஈய நினைத்திடும் காசை—நீ
யாருக்கு நல்குவை தம்பி!

ஊருக்குழைத்திடக் கேட்டார்—உனை
யோகம் புரிந்திடச் சொன்னார்
யாருக் குடன்பட எண்ணம்—நீ
இந்த இரண்டினில் தம்பி?
கார் விதைக்கும் தொழிலாளி—நேர்
கைலை வேண்டிடும் சைவன்
யாரப்பனே நலம் செய்வோன்—உரை
இந்தப் பெரு வையத்திற்கே?

கற்சிலை செய்த கற்றச்சன்—இரு
கைதொழும் கோவிலின் வேலன்
நற்கலை ஈபவன் யாவன்—இதை
நன்கு விளக்கிடு தம்பி!
முற்றும் இசைத் தொழிலாளி—வாய்
மூடி அருள் செய்யும் கண்ணன்
நற்சுவை தந்தவன் யாவன்—நீ
நன்றி செலுத்துதல் யார்க்கு?

கடவுள் அணிந் திட்டமாலை—பூங்
காவிற் சிரிக்கின்ற முல்லை
உடைபட்ட நெஞ்சத்தில் தம்பி—நல்ல
உயிர் கொண்டு சேர்ப்பது யாது?
படைகொண்ட மன்னவன் செங்கோல்—சிறு
பண்ணையிலே பொதுத் தன்மை
எடைபோட்டு நீ கூறுவாயோ—இங்கு
எது நன்மை எதுதீமை தம்பி!

நொய்தான பிழையான புதுநூல்—பிறர்
நூல் கண்டு செய்திட்ட பெருநூல்
வையத்தில் எதுதம்பி வேண்டும்—நீ
வாய்விட்டு விள்ளுவாய் தம்பி!
உய்யும் புரோகிதத் தந்தை—அவன்,
உத்தியோகம் பார்க்கும் மைந்தன்
செய்யும் திருத்தொண் டிரண்டில்—தம்பி
செம்மையாம் ஒன்றினைக் கூறு.

## வாய்மை முரசு

மனிதன் உண்போன்; மற்றவும் உண்பன!
மற்றவை உறங்கும்; மனிதனும் உறங்குவான்!
இன்புறும் பிறஉயிர்; இவனும் ஆங்ஙனே!
துன்புறுவான் இவன்; துன்புறும் பிறவும்!
மனிதன் அறிபவன்; மற்றவும் அறிவன!
மனித னுக்கு; மற்ற உயிர்கட்குக்
குறிகள் உண்டு; நெறிகள் உண்டு!

மனிதன் ஏன் நிலத்தில் வாய்த்த உயிர்களில்
"இனியோன்" "சிறந்தோன்" எனப்படு கின்றான்?
முளைத்த விலங்கு முதற்,கள் ளான்வரை
உள்ள உயிர்கட் கில்லாத தென்ன?
மனித னிடத்தில் வாய்த்த சிறப்பெது'
கேளீர், அதனைக் கேளீர், கேளீரே.

"உள்ளம் கண்டதை உள்ளவர்க் குரைத்தல்"
என்பது, மனித னிடத்தில் தானுண்டு!
பிற உயிர்களிடம் பிரசாரம் செய்யும்
தனி ஒருமேன்மை சற்றும் இல்லை;
இம்மிகூட இல்லை என் றறிக!
உள்ளங் கண்டதை உலகுக் குரைத்தல்
மற்றவற் றினின்று மனிதனைப் பிரிப்பது;
மனித னுக்கு மாண்பு தருவது!

அஞ்சியோ பிறர்பால் ஆவது கருதியோ,
வயிறு தன்னை வளர்க்க எண்ணியோ,
பெற்றதன் கொள்கையைப் பிறர்கை மாற்றுவோன்
உற்ற துரைக்கும் ஒழுக்கம் தீர்ந்தவன்,
தாழ்ந்த கள்ளானில் தாழ்ந்தவ னாவான்.

மனிதருள்ளும் மனிதத் தன்மை
"கொள்கை" என்று கூறுவர் அறிஞர்
கொள்கையை விலைக்குக் கொடுக்கும் மனிதன்
மனித ருள்வாய்த்த மனித விலங்கு!
நெஞ்சை ஒளித்துப் பேசுதல்
வஞ்ச மன்றோ மாநிலத்தீரே!

## விடுதலையே

உன்னைத்தான் விடுதலையே,
உள்ளத்தின் ஒளியே
ஓடிவா திராவிடத்தில்
ஏ செஞ்சொற் கிளியே
தின்னத்தான் சோறில்லை செய்மைக்கோர் வழியில்லை
என்போர்கள் இல்லாமே எல்லார்க்கும் நலம் அருள்வாய்
உன்னைத்தான் விடுதலையே!

உள்ளத்தே நீதான்
உணர்வினிலும் நீயே
ஓடிவா திராவிடத்தில்
ஏ அன்புத் தாயே.
கள்ளத்தார் கொந்தாமல் கண்ணீர் தான் சிந்தாமல்
வெள்ளத்தேன் அவரவரின் வீதத்தால் பொழிபவளே
உன்னைத்தான் விடுதலையே!

ஒருமனிதன் வாட
ஒப்பா நன் னிலையே!
ஓடிவா என் நாட்டினில்
ஏ இன்பப் பொருளே
திருவுடையார் பிடிவாதஞ் செய்தீமை எதிர்மோத
வரும்அனலே; மக்களெலாம் வாழ்த்துகின்ற ஒளிவிழியே
உன்னைத்தான் விடுதலையே!

## தோட்டம்!

ஊருக்குப் போய்வரும் நாளையிலே—மிக
உரத்திடும் வெய்யில் வேளையிலே

ஆருக்கும் தாங்காத பசிகொண்டு—நான்
அங்கொரு தோட்டத்தில் புகக் கண்டு

பழங் கொடுத்தது மாமரம்—என்
பசி தொலைத்தது மாமரம்

நிழல் கொடுத்தது மாமரம்—துயர்
நீங்க வைத்தது மாமரம்

தாகம் தணித்தது தென்னைமரம்—மணம்
தந்து மலர்ந்தது புன்னைமரம்—உற்

சாகம் பிறந்தது வீடுவந்தேன்—மரம்
உதவி செய்ததை நான் நினைந்தேன்.

# திராவிடர்

## திராவிடர்

இடியப்பக் காரா—ஓ—இடியப்பக் காரா!
விடியற் காலம் தட்டைத் தூக்கி
வீட்டார் கேட்கக் கூவி வந்தாய்
இடியப்பக் காரா!

செப்ப னிட்ட வீட்டுக் காரன்
தெலுங்கு பேசும் மீசைக்காரன்
அப்பமு வெல ஏமி என்றான்
அயலான் அவன் என என்றான்
எப்படி அவன் அயல் ஆவான்
இன ஒழுக்கம் குறைந்த துண்டோ?
செப்பும் மொழி தெலுங் கென்றால்
தெலுங்கு மொழியும் உன் உடைமை!
இடியப்பக் காரா!

அடிமரமே ஒன்றேடா
அதன் பெயர்தி ராவிடமே
தடங்கிளைகள் ஐந்தல்லவா
தமிழ், தெலுங்கு, கேரளமே
அடடேகன் னடம், துளுவம்,
ஐங்கிளைக்கும் அடிஒன்றே
கொடிது கொடிது தெலுங்கனைநீ
குறைகூறும் மனப்பான்மை
இடியப்பக் காரா!

ஐந்து நிறத்தில் மணிக் கோவை
அவற்றூடே செல்லுவது
பொன்னிழையே அல்லாமல்
பூணூலா சொல்லிடுவாய்
சென்னைக் காரன் கோழி என்பான்
தெலுங்குகாரன் கோடி என்பான்
கன்னடத்தான் கோளி என்பான்
களிச் சேரலன் கோலி என்பான்

துளுவக் காரன் கோழ் என்பான்
சொன்ன இந்த ஐந்திலும் நீ

## திராவிடர்

இடியப்பக் காரா—ஓ—இடியப்பக் காரா!
விடியற் காலம் தட்டைத் தூக்கி
வீட்டார் கேட்கக் கூவி வந்தாய்
இடியப்பக் காரா!

செப்ப னிட்ட வீட்டுக் காரன்
தெலுங்கு பேசும் மீசைக்காரன்
அப்பமு வெல ஏமி என்றான்
அயலான் அவன் என என்றான்
எப்படி அவன் அயல் ஆவான்
இன ஒழுக்கம் குறைந்த துண்டோ?
செப்பும் மொழி தெலுங் கென்றால்
தெலுங்கு மொழியும் உன் உடைமை!
இடியப்பக் காரா!

அடிமரமே ஒன்றேடா
அதன் பெயர்தி ராவிடமே
தடங்கிளைகள் ஐந்தல்லவா
தமிழ், தெலுங்கு, கேரளமே
அடடேகன் னடம், துளுவம்,
ஐங்கிளைக்கும் அடிஒன்றே
கொடிது கொடிது தெலுங்கனைநீ
குறைகூறும் மனப்பான்மை
இடியப்பக் காரா!

ஐந்து நிறத்தில் மணிக் கோவை
அவற்றூடே செல் லுவது
பொன்னிழையே அல்லாமல்
பூனூலா சொல்லிடுவாய்
சென்னைக் காறன் கோழி என்பான்
தெலுங்குகாரன் கோடி என்பான்
கன்னடத்தான் கோளி என்பான்
களிச் சேரலன் கோலி என்பான்

துளுவக் காரன் கோழ் என்பான்
சொன்ன இந்த ஐந்திலும் நீ

ஒளிக்கும் உயிரைப் பார்த்த துண்டோ
உள்ள பொதுமை கண்ட துண்டோ
தெளிவி லார்க்கும் தெரிவியடா
திராவிடர்!தி ராவிடமே!!
ஒளிக்காதே உன் மனத்தை
உயர் தெலுங்கன் நம்மவனே
இடியப்பக் காரா!

தெலுங்கனா உன் பகைவன்? ஒரு
சேரலனா உன் பகைவன்?
துலங்கும் ஒரு கன்னடனா?
துளுவனுமா உன் பகைவன்?
உலர்சருகே இவர்களெலாம்
உன்பகைவர் என்று சொன்னால்
நலம்புரியும் உறவினர்கள்
நாட்டி லெவர் தாம் உனக்கு?
இடியப்பக் காரா!

தெலுங்குகாரன் நாட்டாட்சி
செய்யும் நிலை வந்துவிட்டால்
தெலுங்கருக்கே நல மெல்லாம்
செய்திடுவான் என்கின்றாயா?
மலையாளி நாடாண்டால்
மலையாளத் தார்களுக்கே
நலம் புரிவான் என்கின்றாயா ?
நல்ல கரடி உன் கரடி
இடியப்பக் காரா!

இரட்டி செய்த ஆட்சியிலே
இரட்டி யார்க்கே நாட்டை எல்லாம்
புரட்டி விட்டான் என்று நீயே
புளுகியதும் உண்டல்லவா?
விருப்பமுடன் வேளா ளன்
வேளாளர் தங்களையே
உருப்படச்செய் தான் என நீ
உளறுவதும் உண்டல்லவா?

வரிந்து கட்டி வன்னியனும்
வன்னியர்க்கே நன்மையெலாம்
புரிந்து விட்டான் என்று மனம்
புழுகியதும் மெய்தானே?
துருக்கன் ஒரு தென்னாட்டான்
துருக்கருக்கே நலம் புரிவான்
சிரிக்கும்படி இப்படி நீ
செப்புவதும் உண்டல்லவா?
இடியப்பக் காரா!

நாவலந்தீ வொன் றதிலே
நவிலும் இரண் டுலகம் உண்டு
மூவேந்தர் கொடிபறக்க
முத்தமிழின் நலம் சிறக்கத்
தேவைஎலாம் கொண்ட திரா
விட உலகம் ஒன்றாகும்!
ஆடுட்டி ஆத்தின்னும்
ஆரியநா டொன்றாகும்!

நடுவிலொரு விந்தியமாம்!
நல்லதிரா விடநாடு.
கடல் மூன்றும் புடைசூழும்
கவினுறு தென் பாங்கினிலே!
வட நாட்டில் திராவிடர்கள்
வாழுகின்றார் அங்கவர்கள்
வடவர்கள்தாம் என்பதான
மனநிலைகொண் டவராவார்

வடுவிலாத் திராவிடத்தில்
வடவர்களைச் சேர்ந்தசில
மடயர்களும் உண்டப்பா
வயிற்றெரிச்சல் கூறிடுவேன்
இடவிரும்பும் திரவிடத்தில்
இரந்துண்டு வாழுமந்தக்
கடையர்க்கோ திரவிடரைக்
கவிழ்ப்பதுதான் பெரு நோக்கம்
இடியப்பக் காரா!

இந்நிலையில் திரவிடன்நீ
என்ன நினைத் திடவேண்டும்?
நின்இனத்தார் பெற்ற பேறு
நி பெற்ற பேறல்லவா?
கன்னடனோ, கேரளனோ,
கன்னானோ, மண்ணானோ,
வன்னியனோ, மன்னவனோ,
எல்லாரும் திரவிடரே!
இடியப்பக் காரா!

திரவிடத்தின் தீமை எலாம்
திரவிடரின் தீமை என்க
திரவிடத்தின் நல மெல்லாம்
திரவிடரின் நல மென்க
மருளாதே அஞ்சாதே
வடவர்களை நீக்கிடுவாய்
திரவிடத்தில் திரவிடரின்
ஆட்சியைஉண் டாக்கிடுவாய்
இடியப்பக் காரா!

## தாயகமே வாழி!

தாயகமே வாழி
தமிழ்—கேரளந் தெலுகு துளுகன் னடமுறு
தாயகமே வாழி

அலைமிகு காவிரி வெள்ளம் போலே
அறிவொளி சேர்க்கும் கல்வியி னாலே
நிலையினி லோங்கி வன்பகை வாட்டி
நீணிலம் வாயார வாழ்த்தவே வாழி
வானமேலேற தாய் மணிக்கொடி!
வளர்க வீடெலாம் செங்குட்டுவன்கள்!
வளமே ஓங்குக! நல்லற மாதர்
மகிழ்வே பொங்குக உலகினில் எங்கள்
தாயகமே வாழி!

□ □ □